# முல்லைப்பாட்டின் வழி தலைவியின் பிரிவுத்துயர்

**முனைவர் பீ.பெரியசாமி**
*தமிழ்த்துறைவர், டி.எல்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*விளாப்பாக்கம், சென்னை*

**ஆய்வுச்சுருக்கம்**
*தலைவி என்றால் தலைமைப் பெண் என்று பொருள்படும். சங்க இலக்கியங்களும் தலைவியைப் பற்றிப் பேசுகின்றன. பெண்கள் பற்றிப் பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையில் சூரர மகளிர், பேய் மகளிர், கந்தருவ மகளிர் என்றும், பெரும்பாணாற்றுப்படையில் மண மகளிர், கோவலர் மகளிர் என்றும் கூறப்படுகின்றன. ஆனால் தலைவி என்ற தனிப்பட்ட நிலையில் சிறப்பாகக் கூறவில்லை. முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு போன்றவற்றில் தலைவி பற்றிக் கூறப்பட்டாலும் தன்னிகரில்லா தலைவியாகவோ, பேராற்றல் பெற்றவளாகவோ இல்லை பெண்ணிற்கு உரியதான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு உடைய வளாகவே உள்ளாள் முல்லைப்பாட்டில் வரும் தலைவி, தலைவனைப் பிரிந்து துயருற்றுக் காணப்படுகின்றாள் அவளின் வருத்தத்தை மிகுவிக்கும் பொருட்டு மாலைப் பொழுதும் சேர்ந்து விடுகிறது முல்லைப்பாட்டில் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை நம்மையும் துயரத்தில் ஆழ்த்தும் உச்சநிலைக்குக் கொண்டு செல்கிறது. களவு வாழ்வு முடிந்து கற்பு வாழ்வில் புகுந்த தலைவி தலைவனின் இல்லமே கதியென்றிருக்கின்றாள். தலைவனின் இல்லத்தில் அவனைத் தவிர மற்றவர்கள் அனைவரும் புதியவர்களே. இத்தகைய சூழலில் தலைவன் பொருள் தேடவோ, போரின் பொருட்டோ பிரிந்து செல்கிறான். இது தலைமகனின்அடிப்படைக் கடமையாகும். இருப்பினும் தலைவிக்கு இப்பிரிவு பெருந்துயரைத் தருகிறது. அவளை ஆறுதல் சொல்லித் தேற்றுவதற்குத் தலைவனின் இல்லத்தில் எவரும் இல்லை. ஆகவே அவள் தன்னைத் தானே தேற்றிக் கொள்கிறாள். தனது மனப் போராட்டங்களை வெளிப்படுத்த இயலவில்லை. கார்காலமும் வந்துவிடவே அவளால் தலைவனைப் பிரிந்திருக்க முடியவில்லை. மாலைப் பொழுதும் அவளை வாட்டுகிறது. பலமுனைத் தாக்குதலுக்குள்ளான தலைவியின் மன உணர்வினை ஆசிரியர் மென்மையான முறையில் தெளிவுறுத்துகிறார். தனிமையைப் போக்க தன்நெஞ்சாற்றுவதே சிறப்பு. தனது மனதுக்கு இயல்பை உரைத்தும், உலகியலை ஏற்றுக் கொள்ள சமாதானம் செய்து கொள்ளுதலுமே சிறப்பு. அதுவே மன இறுக்கத்தையும், அச்சத்தையும் போக்கும் என நெஞ்சாற்றுதலை வலியுறுத்துகிறார். மாலைப்பொழுதில் பாடக்கூடிய செவ்வழிப் பண்ணும் தலைவியின் நிலையை வெளிப்படுத்தும் இரங்கற் பண்ணாக அமைந்துள்ளது. ஆகவே தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் கார்கால மாலைப்பொழுது பகைவராகவே உள்ளது. வினையின் பொருட்டு சென்ற தலைமகன் வெற்றி வாகை சூடியே வருவதாகச் சொல்லப்படுகிறது. விரிச்சி நற்சொல் கேட்டல் அக்கால மக்களின் நம்பிக்கைகளில் ஒன்றாக கருதப்படுகிறது.*

***முக்கியச்சொற்கள்*** *சங்க்காலம், முல்லைப்பாட்டு, தலைவி, தலைவன் – தலைவி பிரிவு, கார்காலம், மாலைப்பொழுது, செவ்வழிப் பண், பிரிவுத்துயர், மனஅழுத்தம், நெஞ்சாற்றுதல், விரிச்சி கேட்டல், தலைவன் மீண்டு வருதல்.*

## முன்னுரை

தலைவி என்றால் தலைமைப் பெண் என்று பொருள்படும். சங்க இலக்கியங்களும் தலைவியைப் பற்றிப் பேசுகின்றன. பெண்கள் பற்றிப் பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையில் சூரர மகளிர், பேய் மகளிர், கந்தருவ மகளிர் என்றும், பெரும்பாணாற்றுப்படையில் மண மகளிர், கோவலர் மகளிர் என்றும் கூறப்படுகின்றன. ஆனால் தலைவி என்ற தனிப்பட்ட நிலையில் சிறப்பாகக் கூறவில்லை. முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு போன்றவற்றில் தலைவி பற்றிக் கூறப்பட்டாலும் தன்னிகரில்லா தலைவியாகவோ, பேராற்றல் பெற்றவளாகவோ இல்லை பெண்ணிற்கு உரியதான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு உடைய வளாகவே உள்ளாள் முல்லைப்பாட்டில் வரும் தலைவி, தலைவனைப் பிரிந்து துயருற்றுக் காணப்படுகின்றாள் அவளின் வருத்தத்தை மிகுவிக்கும் பொருட்டு மாலைப் பொழுதும் சேர்ந்து விடுகிறது. இவ்வாறு தலைவியுடன் மாலைப்பொழுதும் சேர்ந்து இன்பம் மிகுவிப்பதைப் பற்றிச் சிந்திப்பது இக்கட்டுரையின் நோக்கம்.

## தலைவி

"நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்று பாரதி சாடினாலும் பெண் என்பவள் பெண்மைக்கும் மென்மைக்கும் உரியவளாகவே பல கவிஞர்கள் காட்டுகின்றார்கள் முல்லைப்பாட்டில் வரும் தலைவியும் மென்தன்மை மிக்கவாளாகவே உள்ளாள் திருவள்ளுவரும்,

> "நன்னீரே வாழி அனிச்சமே நின்னினும்
> மென்னீரள் யாம்வீழ் பவள்" (குறள் 1111)

என்று பெண்ணின் மென்மையைக் கூறுகிறார். பெரும்பாணாற்றுப்படையில்,

> ".....................................முள்ளுடுத்
> பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
> கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்"
> (பெரும்.184-191)

முள்ளுடைய விடத்தே தொடரி முதலிய காடுகள் சூழ வளர்ந்த தொழுக்களையுடைய அமைக்கப்பட்ட அழகிய குடியிருப்பினையுடைய நிலத்தின் கண்ணே அமைக்கப்பட்ட அழகிய குடியிருப்புகளையுடைய சிறிய ஊர் முல்லை நிலம் என்று பெரும்பாணாற்றுப்படை கூறும், முள்ளுடைய பகுதியாக முல்லை நிலம் காணப்பட்டாலும் அங்கு உறையும் தலைவி மென்மை மிக்கவளாகவே காணப்படுகின்றாள் நெடுநல்வாடையும் தலைவியின் மென்மைக்கு,

"வெள்ளி வள்ளி வீங்கு இறைப் பணைத்தோள்
மெத்தென் சாயல், முத்து உறழ் முறுவல்"

(நெடுநல்.36-37)

இதில் மெத்தென் சாயல் என்பதற்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாலும் உணரப்படும் மென்மைத் தன்மையாகிய சாயல் என்று பொருள் உரைப்பர் சான்றோர். (பத்துப்பாட்டு மூலமும் உரையும், நெடுநல்வாடை, ப. 195), மதுரைக்காஞ்சியும்,

"மயில் இயலோரும், மடமொழியோரும்"
(ம.காஞ்சி. 416-418)

என்று மயிலின் தன்மையுடைவர்களும் மடப்பத்தையுடைய மொழியையுடையவர்களும் என்று பெண்ணின் தன்மையைக் கூறும்.

இயல்பாகவே மென்மையுடையவளாகவே காணப்படும் பெண் தலைவனைப் பிரிந்திருந்தால் அவள் உடலினையும் உள்ளத்தினையும் சொல்வதற்கில்லை. இங்ஙனம் வருத்தமுற்றுக் காணப்படுகையில் மாலைப் பொழுதும் சேர்ந்து அவள் வருத்தத்தை மிகுவிக்கிறது.

**தலைவி - தலைவன் பிரிவு**

தலைவன் போர் காரணமாகத் தலைவியை, வேனிற்காலத்தில் பிரிந்து செல்கின்றான். கார்காலத்தில் வருவதாகத் தலைவிக்கு வாக்குரைத்துத் தன் வினை முடிக்க விழைந்து விரைந்தான். தலைவியை மீளாத் துயரில் ஆழ்த்திய கார்காலம் தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற கார் காலம், தன் வருகையைக் கீழ்க்கண்டவாறு உணர்த்துகின்றது.

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடுமிழ் பனிக்கடல் பருகி, வலனேர்பு,
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை

(முல். 1-6)

இயற்கை எழில் நிறைந்த இம்மாலைப் பொழுது, தலைவிக்குத் துன்ப மாலையாய் அமைந்தது.

**பிரிவுத் துயர்**

முல்லைப்பாட்டில் தலைவி, தலைவன் குறித்த காலத்தில் வராததால் பிரிவுத்துயரினால் தனிமையில்,

"இன்றுயில் வதியுநற்காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு"

(முல். 80-81)

இவ்வாறு வருந்திப் புலம்புவதாகக் கூறப்பட்டுள்ளது.

தனிமை ஒரு நோய். உள்ளும் புறமும் அரித்துக் கொண்டு போகும் ஒரு பிணி. இது உள்ளத்தை உலுக்கும் ஒரு கொடிய அனுபவம். தலைவன் வரவை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்து ஏமாந்த தலைவி உள்ளம் உடைகின்றாள். உள்ளத்தின் நெருக்கடி உடல் நோயின் அறிகுறிகளாக நிலை மாறுதல் சங்க இலக்கியப் பாடல்களில் மிகுதியாகவும், சிறப்பாகவும் கூறப்பட்டுள்ளன. பசலை, மேனி நலம் தொலைதல், உறக்கமின்மை ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். வெறுப்புணர்வு, துன்புறுத்துவதும், கவலையும் அச்சமும் தொடர்வதும், களைப்பு மற்றும் உளநோய் அறிகுறியாக வெளிப்படுத்தப்படும் உள்ளத்தின் துன்பம் உடலின் துன்பமாக மாற்றமடைகின்றது. முல்லைப்பாட்டுத் தலைவி, தலைவனின் பிரிவால் உடல் மெலிந்து, வளைகழலுதல் போன்ற பசலை நோயின்கண் ஆட்படுவதாக,

"ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து"

(முல். 82-84)

இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இவ்வாறு தலைவனின் பிரிவால் தனிமையில் வாடும் மகளிருக்குப் பசலை நோய் உண்டாவது இயல்பே என்பதைத் தொல்காப்பியர்,

"வண்ணம் திரிந்து புலம்புங்காலை
உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையார் புணர்க்கவும் பெறுமே"

(தொல். பொருள். இளம் பொருளி - 7)

என்று தலைமகனைப் பிரிந்து வாடுங்காலத்தில் அப்பிரிவினை உணரும் இயல்பில்லாத தன் உறுப்புகளும் உணர்ந்து வருந்துதலைப்போல் அமைத்தலும் மரபு என்பார். மேலும்,

"உண்டர்குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே" (தொல். பொருள். இளம் பொருளி - 13)

இயற்கையாக உண்ணும் இயல்பில்லாத பொருள்களை உண்ணும் இயல்பினை உடையன போல அமைத்துக் கூறலும் உண்டு என்பது தொல்காப்பியர் கருத்து.

பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் வருவான் என்னும் உறுதியான நம்பிக்கை, கார்காலம் காலமல்லாத காலத்து வந்ததாகத் தோன்றும் எண்ணம் ஆகிய இரண்டிடைப்பட்ட தலைவி பிற பொருளின் மேல் வெறுப்பினைக் காட்ட இயலாத நிலையில் தன்னைத் தரையில் சிந்திய பாலாக உருவகம் செய்கிறாள்.

"கன்றும் உண்ணாது கலத்தினும் படாஅது
நல்லான் தீம்பால் நிலத்துக்கா அங்கு
(குறுந். 27:1-2)

தனக்கும் தலைவனுக்கும் பயன்படாமல் தன் அழகினைப் பசலை உண்ணுகிறதே எனத் தலைவி வருந்துகிறாள்.

**தலைவியின் மன அழுத்தம்**

முல்லைப்பாட்டில் தலைவன் குறித்த காலத்தில் வருவதாகச் சொல்லிய கார்காலமும் வந்துவிட்டது ஆனால் தலைவன் வரவில்லை அதனால் ஏற்பட்ட வருத்தம் ஒரு புறம், தலைவனைப் பிரிந்த தலைவியை மாலைக் காலம் வாட்டுவதால் ஏற்பட்ட வருத்தம் மறுபுறம், இவ்விரண்டும் தலைவியின் மன அழுத்தத்திற்கான காரணமாக அமைந்துள்ளது.

**தலைவியின் துயர் தீர்க்கும் முயற்சி**

தலைவியின் இப்பிரிவுத் துயரைக் கண்ட பெருமுது பெண்டிர் எவ்வகையிலேனும் தலைவிக்கு ஆறுதல் அளித்தல் வேண்டுமென விழைந்தவராய், அம்மாலைப் பொழுதில் தலைவி வாழும் ஊரில் உள்ள திருமாலுக்கு, நெல்லையும் முல்லை மலரையும் தூவி வழிபட்டு,

".............................................தறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி" (முல் 9-11)

கேட்டு நின்றனர். பெருமுது பெண்டிரின் இம்முயற்சிக்குப் பயனளிக்கும் வகையிலான நற்சொல்லைக் கேட்டு,

"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமர னோக்கி யாய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோல் கோவலர் பின்னின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என் போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்"
(முல். 12 – 17)

தலைவியிடம் சென்று இந்நற்செய்தியினை,

"நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்டதிறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது நீநின்
பருவரல் எவ்வம் களை மா யோய்எனக்"
(முல். 18-21)

கூறி நின்றனர்.

**துயரின் உச்சநிலை**

கார்காலம் வந்தும், தலைவனைக் காணாமல் துன்பமுற்ற தலைவி தன் நெஞ்சை அவளால் முடிந்த வரை தேற்றினாள். எனினும் தலைவனின் பிரிவே அவளை மிகுதியாக வாட்டியது.

நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும், ஓடுவளை திருத்தியும்,
மையல் கொண்டும், ஓய்யென உயிர்த்தும்
ஏவறு மஞ்ஞையின் நடுங்கி, இசை நெகிழ்ந்து
பாவை விளக்கில் பரூஉச்சுடர் அழல
இடம்சிறந்த உயரிய எழுநிலை மாடத்து"
(முல். 81-87)

நின்று தலைவனின் வருகைக்காக வழிமேல் விழி வைத்து காத்திருந்தாள்.

**தலைவியின் துயர் தீர்த்த அருமருந்து**

எந்நிகழ்ச்சியைக் காணினும் எவர் உறுதி சொல் கேட்பினும் தலைவியின் துயர் தீராது. தலைவிக்குத் தலைவனின் வருகையே இன்பத்தை அளிக்கும். காத்திருந்த தலைவியின் காதில் ஒலித்த தேரின் ஒலியே, தலைவனின் வருகையை உணர்த்திய குதிரைகளின் கனைப்பு ஒலியேர் தலைவியின் துயருக்கு அருமருந்தாய் அமைந்தது.

"இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின, வென்று பிறர்"
(முல். 88-89)

**முயற்சியை முறியடித்த தலைவியின் துயர்**

தலைவியின் பெருந்துயரை, காதல் நோயைக் கண்டு, கலக்கமுற்ற மகளிர் செய்த துயர் தீர்க்கும் முயற்சியைத் தலைவியின் துயர், காதல் பெருக்கால் முறியடித்தது. அதன் வெளிப்பாடாய்த் தலைவியின் கண்கள் முத்து முத்தாக கண்ணீரை உதிர்த்தன.

"காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போல் உண்கண் புலம்புமுத் துறைப்ப"
(முல், 22-23)

**மாலைப் பொழுது**

மாலைப் பொழுதை இளங்கோவடிகள் "மயக்கும் மாலைப் பொழுது" என்று குறிப்பர் பகலும் இரவும் மயங்குகின்ற பொழுதை மாலைப்பொழுது என்பர் மயங்குதல் என்பதே மாலை என்றாயிற்று.

"கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
……………………………………………………………
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
(முல். 5-24)

முல்லைப்பாட்டில் தலைவனைப் பிரிந்ததால் தலைவிக்குத் துன்பம் மிகுகிறது. முதற்பெயல் பொழிந்த மாலைப்பொழுது தலைவியின் வருத்தத்தை மிகுவிக்கிறது. முதுபெண்டிர் அவளை ஆற்றுவிக்கும் பொருட்டுத் தம் ஊர்ப்பக்கத்தேயுள்ள மாயோன் கோயிலிற் போய் நெல்லும் மணங்கமழும் முல்லைப் பூவுந் தூவி வணங்கி நற்சொற் கேட்டு நின்றார். அங்கே அருகாமையிலிருந்த மாட்டுக் கொட்டிலில் நின்ற ஓர் இடைப்பெண், புல் மேயப் போன தாய் இன்னும் வராமையால் சுழன்று வருந்துகின்ற ஆன்கன்றுகளைப் பார்த்து "நுங்கள் தாய்மார் இப்பொழுதே வந்து விடுவர். வருந்தாதீர் " என்று நற்சொல் கூறுவர். இவ்வாறு முதுபெண்டிர் ஆற்றுவிக்கவும் ஆற்றாமல் வருந்துகிறாள் மாலைப்பொழுது தலைவிக்கு வருத்தத்தையே தருகிறது.

மாலைப்பொழுது பெரும்பாலும் பழைய நினைவுகளை உளம் கொள்வதாகவும் அதன் பொருட்டுத் துன்பம் தருவதாகவே உள்ளது. இந்த மாலைப் பொழுதின் வருகையை,

"சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் கானுஉ"
(குறிஞ்சி.229-230)

என்று குறிஞ்சிப்பாட்டு கூறுகிறது. சினம் கொண்ட வேந்தன், படை நடத்திச் செல்லும் போர்க்களத்தைப் போல விரைந்த மாலைப்பொழுது வந்தது என்று மாலைப் பொழுதின் வருகையைக் கூறும் திருக்குறளும்,

"காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்" (குறள்.1224)

காதலர் இல்லாத காலத்தில் மாலைப்பொழுது போர்க்களத்தில் கொலைஞர் போல உயிரைக் கவர வரும் என்று கூறுகிறது (பேரா. இரா. சாரங்கபாணி, திருக்குறள்(இயல்புரை), ப.251). போர்க்களத்தைப் போல விரைந்த மாலை, ஏதிலர் போல வந்த மாலை என்று மாலைப் போழுது பல நிலைகளில் வந்தாலும் தலைவிக்கு வருத்த்த்தைக் கொடுப்பதேயன்றித் தலைவனுக்கு வருத்தம் தரவில்லை. மேலும், தலைவன் தன் மனையாளை போரின் காரணமாக பிரிந்து செல்ல நேர்கிறது. தலைவன் தன் பிரிவை உணர்த்தி கார்காலத்தின் தொடக்கத்தில் வருவேன் என்ற சொல்லின் வழி இல்லிருக்க கூடிய தலைவியின் மன இயல்பு இங்கு விளக்கப்படுகிறது,

"ஒரு நாள் எழுநாள்போற் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு"
(குறள் 1249)

தலைவனின் பிரிவாற்றாமல் அவன் கூறிச் சென்ற சொல்லின் வழி கற்புத்திறம் மாறாமல் ஆற்றி இருக்கிறாள் தலைவி என்று எடுத்துரைக்கிறார்.

**நெஞ்சாற்றுதல்**

மனித வாழ்வில் ஏற்படும் தோல்விகள், ஏமாற்றங்கள் போராட்டங்கள் ஆகியவை ஒருவருக்குத் தம் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள தடையாக இருக்கின்றன. மேலும், அவர் தம்மைப் பற்றித் தாமே தாழ்வாக எண்ணுவதற்கு இவை காரணமாகின்றன. இதுபோன்ற சமயங்களில் தற்காப்பு இயங்குமுறை செயல்படத் தொடங்கி மனிதனின் அகத்தைப் பாதுகாக்கின்றது. தலைவனின் பிரிவு தவிர்க்க இயலாத ஒன்று என்பதை உணர்தலும் அவன் திரும்பி வரும் வரை அமைதியுடன் காத்திருத்தலும் தலைவிக்கு உள நலம் தரும். உள நலம் உடைய தலைவி அதனைத்தான் செய்வாள். இதன்படி முல்லைப்பாட்டில் தலைவி தன்னைத் தானே ஆற்றுப்படுத்திக் கொள்பவளாகக் காட்டப்பட்டுள்ளாள். வாழ்வில் நேரும் துன்பங்களை உணரும் திறனும், அதனை எதிர்கொண்டு ஏற்றுப் பொறுக்கும் ஆற்றலும் உளநலத்தைப் பாதுகாக்கும் அடிப்படைத் தேவைகளாகும். ஆயினும்,

"இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே" (புறம் 192)

என்னும் பாடல் கூறியுள்ளதைப் போல உள்ளத்தின் நடுநிலை அமைதியைக் காத்தல் அனைவருக்கும் எளிதன்று தான் விரும்பிய செயல்கள் நடைபெற இயலாதபோது வருந்தலும், அஞ்சுதலும், கவலையுறுதலும் உள்ளத்தின் இயல்பாகும். இத்தகைய நேரங்களில் மனிதனுக்கு அவன் உள்ளமே பகையாகின்றது.

"பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
இன்ப லிமிழிசை யோர்ப்பனன் கிடந்தோள்"
(முல். 85-88)

முல்லைப்பாட்டுத் தலைவி தலைவனின் பிரிவை ஆற்ற முடியாமல் ஏழடுக்கு மாளிகையின் கூடல் வாயிலிலே மழைநீர் அருவியாகத் திரண்டு விழுகின்றதனால் உண்டாகும் பல்வேறுபட்ட ஓசையின்கண் தன் உள்ளத்தைப் போக்கித் தன்னைத் தானே ஆற்றுப்படுத்திக் கொள்பவளாகக் கூறப்பட்டுள்ளது.

**காலத்தின் வருகை**

தலைவன் கூறிச்சென்ற கார்காலம் வந்துவிட்டதை இயற்கை மாற்றங்களினால் தலைவி அறிகிறாள். தலைவன் வருவதாய் சொன்ன காலத்தை நினைத்து பார்க்கிறாள் தலைவி என்பதை,

பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் முல்லை
நாழி கொண்ட நறுவீ முல்லை (முல்.6)

முல்லை மலரானது மலர்ந்தது, மாலைக் காலத்து மழையை பொழிய கார்காலமானது தொடங்கியது.

**தலைவி நற்சொல் கேட்டல்**

விரிச்சி - நற்சொல் கேட்டல் தான் நினைத்த காரியம் நன்மையில் முடியுமா? தீமையில் முடியுமா? என்பதை கடவுளைத் தொழுது பின் அருகில் உள்ளவர்கள் பேசும் நன்மொழியைக் கேட்டல் அக்காலத்து மக்களின் இயல்பாம் தலைவியும் தன் ஆற்றாமையால்,

அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப
(முல். 7-10)

இறைவனை வழிப்பட்டு பெருமுதுபெண்டிரின் விரிச்சி கேட்டு நின்றாள். அச்சொற்கள் தலைவிக்கு நன்மைபயத்தது.

**தலைவி அகம் மகிழ்தல்**

தலைவனின் வருகைக்காக நற்சொல் கேட்டு நின்ற தலைவிக்கு, சிறிய கயிற்றால் கட்டப்பட்ட பச்சிளம் கன்று பால் உண்ணாமல் பசியால் வருந்தியதைப் பார்த்த இடையர்குல மகள் நும் தாயார் வந்துவிடுவார் என்று கூறியஇனிய மொழிகள் மன மகிழ்ச்சியைக் கொடுத்தது என்பதை,

சிறுதாம்பு தொடுத்த பசலைக்கன்றின்
உறுதுயர் அலமர னோக்கி யாய்மகள்
இன்னே வருகுவர் தாய ரென்போள்
நன்னர் நன்மொழி கேட்டன (முல். 21-24)

நற்சொல் கேட்ட தலைவியிடம் போர் மேற்சென்ற தலைவன் வெற்றியோடு உன்னைக் காண வருவான் எனப் பலரும் ஆறுதல் மொழிகள் சொல்ல கண்ணீர்த்துளிகள் முத்துப்போல் விழுந்தது.

பூப்போல் உன்கண் புலம்பு முத்துறைப்பா
(முல்.23)

மேலும்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர
புன்கணீர் பூசல் தரும் (குறள் - 71)

இவ்வரிகள் தன் ஆருயிர் தலைவனின் மேல் தலைவி வைத்துள்ள அன்பினை விளக்குகிறது.

**தலைவியின் மன இயல்பு**

தலைவன் இல்லாத தனிமை துயரால் துன்பமுற்று வருந்துகிறாள் தலைவி. மேலும் அவ்வருத்தத்திலும் தலைவன் கூறிச் சென்ற சொல்லின் கற்புத்திறம் மாறாமல் தன்னைத் தேற்றிக் கொண்டு கழன்று செல்லும் தன் வளையல்களைத் திருத்தியும், மயங்கியும், பெருமூச்சுடனும், அணிகலன்கள் நெகிழ்தலை சரி செய்து பாவை விளக்கு ஏற்றி ஏழ் அடுக்கு மாளிகைளில் தலைவி வீற்றிருக்கிறாள் என்பதை,

நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஒடுவளை திருத்தியும்
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
(முல். 81 – 85)

என்னும் பாடலடிகளால் அறியமுடிகிறது. இதனை,

கெட்டார்க்கு நாட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்(குறள். 1293)

மேலும், தன் நெஞ்சம் மட்டுமே துணையென ஆற்றி இருக்கிறாள் தலைவி. தலைவன் பிரிவால் வாடும் தலைவிக்கு தோள் மெலிதலும் வளையல் நெகிழ்தலும் உண்மை என்பதை,

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள் (குறள்-1234)

வள்ளுவரின் கருத்தாலும் அறிய முடிகின்றது.

**தலைவன் மீண்டு வரும் மழை காலச்சிறப்பு**

தலைமகன் பகைவரையெல்லாம் வென்று பகைப் புலத்தைக் கவர்ந்து கொண்டு பெரும் படையோடு வெற்றிக்கொடியை உயரத்தூக்கி கொம்பும், சங்கும் முழங்க வருகிறான். மேலும் நீலமலர்கள் பூக்கவும், கொன்றைமரங்கள் பொன்போல் மலரவும், காந்தள் மலர்கள் அழகிய கார்காலம் வந்தது. பிரிந்து சென்ற தலைமகன் மீண்டும் முல்லை நிலத்தில் வந்தபோது அவனது தேரிற் கட்டிய குதிரை கனைக்கும் ஓசையானது ஆற்றியிருக்க கூடிய தலைவியின் செவிக்கு விருந்தாய் அமைந்தது. இவ்வாறு முல்லைப் பாட்டு தலைவியின் மனவியல் நுட்பத்தை சிறப்பிக்கிறது.

**முடிவுரை**

முல்லைப்பாட்டில் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை நம்மையும் துயரத்தில் ஆழ்த்தும் உச்சநிலைக்குக் கொண்டு செல்கிறது. களவு வாழ்வு முடிந்து கற்பு வாழ்வில் புகுந்த தலைவி தலைவனின் இல்லமே கதியென்றிருக்கின்றாள். தலைவனின் இல்லத்தில் அவனைத் தவிர மற்றவர்கள் அனைவரும் புதியவர்களே. இத்தகைய சூழலில் தலைவன் பொருள் தேடவோ, போரின் பொருட்டோ பிரிந்து

செல்கிறான். இது தலைமகனின்அடிப்படைக் கடமையாகும். இருப்பினும் தலைவிக்கு இப்பிரிவு பெருந்துயரைத் தருகிறது. அவளை ஆறுதல் சொல்லித் தேற்றுவதற்குத் தலைவனின் இல்லத்தில் எவரும் இல்லை. ஆகவே அவள் தன்னைத் தானே தேற்றிக் கொள்கிறாள். தனது மனப் போராட்டங்களை வெளிப்படுத்த இயலவில்லை. கார்காலமும் வந்துவிடவே அவளால் தலைவனைப் பிரிந்திருக்க முடியவில்லை. மாலைப் பொழுதும் அவளை வாட்டுகிறது. பலமுனைத் தாக்குதலுக்குள்ளான தலைவியின் மன உணர்வினை ஆசிரியர் மென்மையான முறையில் தெளிவுறுத்துகிறார். தனிமையைப் போக்க தன்நெஞ்சாற்றுவதே சிறப்பு. தனது மனதுக்கு இயல்பை உரைத்தும், உலகியலை ஏற்றுக் கொள்ள சமாதானம் செய்து கொள்ளுதலுமே சிறப்பு. அதுவே மன இறுக்கத்தையும், அச்சத்தையும் போக்கும் என நெஞ்சாற்றுதலை வலியுறுத்துகிறார். மாலைப்பொழுதில் பாடக்கூடிய செவ்வழிப் பண்ணும் தலைவியின் நிலையை வெளிப்படுத்தும் இரங்கற் பண்ணாக அமைந்துள்ளது. ஆகவே தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் கார்கால மாலைப்பொழுது பகைவராகவே உள்ளது. வினையின் பொருட்டு சென்ற தலைமகன் வெற்றி வாகை சூடியே வருவதாகச் சொல்லப்படுகிறது. விரிச்சி நற்சொல் கேட்டல் அக்கால மக்களின் நம்பிக்கைகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. இராமசுப்பிரமணியம் வ.த. (உரை), புறநானூறு, திருமகள் நிலையம், சென்னை. பதி.2008.
2. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் – பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, பதி.2019.
3. கதிர் முருகு(உரை), குறிஞ்சிப்பாட்டு, சாரதா பதிப்பகம், சென்னை, பதி.2012.
4. கதிர் முருகு(உரை), பெரும்பாணாற்றுப்படை, சாரதா பதிப்பகம், சென்னை, பதி.2009.
5. கதிர் முருகு(உரை), மதுரைக்காஞ்சி, சாரதா பதிப்பகம், சென்னை, பதி.2013.
6. திருவேந்தி (உரை), குறுந்தொகை, சந்தியா பதிப்பகம், சென்னை, பதி.2009.
7. பரிமேலழகர் (உரை), திருக்குறள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. பதி.2017.
8. ருக்மணி இரா (உரை), நெடுநல்வாடை, காவ்யா பதிப்பகம், சென்னை, பதி.2009.
9. வில்வபதி கோ (உரை), முல்லைப்பாட்டு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. பதி.2007.